सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
**Central Bank of India**

# சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

கோட்ட அலுவலகம், ராஜா முத்தையா மன்றம்,
முதல் தளம், டாக்டர். அம்பேத்கர் சாலை,
மதுரை - 625 020.
போன் : 0452-2521836, 37, 1791, 2522523, 2526752, 53

## இணைப்பு - IVA [பார்க்க விதி 8 (6)] அசையாச் சொத்து விற்பனை

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8 (6)-ன் நடைமுறைகளின் கீழான அசையாச் சொத்து விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு.**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், M/s உதயா டெக்ஸ்டைல்ஸ், பிரதிநிதித்துவப்படுத்தும் இதன் உரிமையாளர்: (காலஞ்சென்றவர்) திரு. S. கருணாநிதி, (காலஞ்சென்றவர்) திரு. S. கருணாநிதி அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள்: திரு. K. உமாபதி, திரு. K. கந்தசாமி, திரு. K. உதயாபானு, திரு. K. செல்வப்பிரியன், Ms. ராஜேஸ்வரி ஆகியோரிடமிருந்து சென்ட்ரல் பாங்கு ஆப் இந்தியா, கடம்பூர் கிளைக்கு வர வேண்டியுள்ள, கணக்கு எண்: -ஐச் சேர்ந்த **ரூ.33,03,400/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து மூன்றாயிரத்து நானூறு மட்டும்) (01.06.2022 நாள்படி)** தொகையை மேல்வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன் திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்தவரான சென்ட்ரல் பாங்கு ஆப் இந்தியா வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரால் முறையாக சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் முறையில் **05.07.2022** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

**குறைந்தபட்ச விலை ரூ.25,06,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து ஆறாயிரம் மட்டும்), டேவணித் தொகை (EMD) ரூ.2,50,600/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து அறுநூறு மட்டும்) மற்றும் ஏல உயர்வுத் தொகை ரூ.25,000/-.**

### சொத்து விவரங்கள் : அசையாச் சொத்து

இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. இது **திரு. S.கருணாநிதி** அவர்களின் பெயரிலுள்ளது. இதன் விவரங்கள் பின்வருமாறு:

**இனம் எண். 1 :** வீட்டுக் கட்டடம். அமைவிடம் - கடம்பூர் கிராமம் தற்போது பேரூராட்சி, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம். சர்வே எண்: 56/418 மற்றும் கதவு எண்: 32,34/25, பரப்பளவு 1337.50 சதுர அடி. எல்லைகள்: வடக்கு: A.P.M.துரைசாமி நாடார் மற்றும் S. கருணாநிதி ஆகியோரின் பொதுச் சந்து, கிழக்கு: பொது வழிப்பாதை, தெற்கு: கிழக்கு - மேற்குத் தெரு, மேற்கு: ராமசாமி வீடு.

**இனம் எண். 2 :** காலி நிலம். அமைவிடம் - கடம்பூர் கிராமம் தற்போது பேரூராட்சி, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம். சர்வே எண்: 56/418, பரப்பளவு 976.50 சதுர அடி. எல்லைகள் : வடக்கு : கிழக்கு மேற்குத் தெரு, கிழக்கு: சந்திரமோகன் அவர்களின் காலி மனை இடம், தெற்கு: கிழக்கு - மேற்கு ஓடை, மேற்கு: சுப்பு அம்மாள் வீடு.

இந்த ஏல விற்பனையானது இணைய வழி E-ஏல / ஏலக்கோரல் மூலம் https://ibapi.in இணையத்தளத்தில் **05.07.2022 அன்று முற்பகல் 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை நடத்தப்படும்.** டேவணித்தொகை செலுத்தவும், E-ஏலப் படிவம் சமர்ப்பிக்கவும், ஆய்வு செய்யவும் கடைசி நாள்: **04.07.2022 மாலை 05.00 மணி வரை.** டேவணித்தொகையைக் (EMD) கணக்குப் பரிமாற்றம் / NEFT / RTGS மூலம் செலுத்த வேண்டிய அதிகாரப்பூர்வ அலுவலரின் கணக்கு எண்: 3017087915, IFSC எண் CBIN0283094. அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உச்சபட்சமாகத் தெரிந்த வரையில், கடனீட்டுச் சொத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் அதன் மீது வில்லங்கம் ஏதும் இல்லை. எனினும் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் வில்லங்கங்கள் குறித்து தாங்களே சொந்தமாக விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்தவரின் இணையத்தளம், அதாவது: https://centralbankofindia.co.in-இல் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள். மேலும் https://centralbank.ibapi.in இணையத்தளத்தையும் பார்க்கலாம். தொடர்பு எண்: 8489925248.

**நாள் : 04.06.2022**
**இடம் : மதுரை**

**அதிகாரப்பூர்வ அலுவலர்,**
**சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா.**